**வரகாபொல பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 02 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 22 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 19 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் வரகாபொல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டிற்காக மீளாய்வாண்டில் கிடைத்திருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,902,750 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த ஆண்டின் பணமான அன்றி நிலுவை பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டதாகவும் எதிர்காலத்தில் கிடைக்கும் பணத்தை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 திகயன்று கடன்கொடுனரின் கீழ் குறிப்பிட்டு இருந்த ரூபா 23,362,968 ஆன மூதன பொருட் கொள்வனவை மூலதனமாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மூலதனமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக் கணக்கில் மூலதனமாக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டு வீதவரிக்காக வழங்கப்பட்ட வட்டம் ரூபா 233,943 கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக் கணக்கில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | மீளாய்வாண்டு பண்டகக் கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியன்று பசளை இருப்புகளின் பெறுமதியான ரூபா 231,075 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக் கணக்கில் பசளை இருப்பை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கடந்த ஆண்டிற்காக மீளாய்வாண்டில் கிடைத்திருந்த முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணத்திற்காக செலுத்தப்பட்ட நிர்வாக கட்டணம் முறையே ரூபா 162,400 மற்றும் ரூபா 53,078 மீளாய்வாண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய செலவினத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணத்திற்கா செலுத்தப்பட்ட நிர்வாக கட்டணத்தை உரிய ஆண்டின் செலவாக குறிப்பிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஊ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்த ரூபா 58,895 பெறுமதியான பாவனைப் பொருட்கள் அலுவலக உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக் கணக்கில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (எ) | மீளாய்வாண்டு இறுதியில் நடைமுறையல்லாத சொத்து மீதி மற்றும் மூனதனத்திற்கு வருமானத்தின் பங்களிப்புக் கணக்கின் மீதிக்கிடையில் ரூபா 39,683,354 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | குறித்த கணக்கின் மீதிகளை இணக்கஞ் செய்து சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக் கணக்கில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஏ) | மீளாய்வாண்டு இறுதியில் 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதி மற்றும் உபயோக பதிவேடுகள் பிரகார மீதிக்கிடையில் ரூபா 51,468,769 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் உபயோக பதிவேடுகளை இணக்கஞ் செய்து சரி செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | தகவல்களை கண்டறிந்து எதர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஒ) | கூட்டுத் தொகை ரூபா 9,155,400 ஆன 04 கணக்கு விடயங்களிற்கு உரிய பதிவேடுகள் மற்றும் அட்டவணைகள் சமர்பிக்கப்படவில்லை. | கணக்கு விடயங்களை உறுதி செய்ய போதி சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | இவ் அட்டவணையை சமர்பிக்கவில்லை என ஏற்றுக் கொள்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இலக்கம் 24 கொண்ட தேசிய இறைவரி சட்டத்தின் உழைக்கும் போது வரி செலுத்தல் 07 ஆம் அட்டவணை | பிரதேச சபை 11 அங்கத்தவர்களின் சம்பளத்திலிருந்து அறவிட வேண்டிய உழைக்கும் போது செலுத்தும் வரி ரூபா 376,605 | உழைக்கும் போது செலுத்தும் வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இனை அறவிடப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 30/2016 பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 07 வாகனங்களின் எரிபொருள் பாவனை பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் குறைகளை நிவர்த்தி செய்து கொண்டு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | 5 ஆண்டுகளிற்கு ஒரு முறை வீதவரி ஆதனங்கள் மதிப்பிடப்பட வேண்டிய போதும் 2007 ஆண்டு மதிப்பீட்டின் பிரகாரம் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 ஆண்டிலிருந்து மதிப்பீட்டு திணைத்திடம் கோரிக்கை விடுத்த போதும் அதன் பிரகாரம் புதிய மதிப்பீடு 2020 ஜனவரி மாதம் மேற்கொள்ளப்பட்டதாகவும் எதிர்காலத்தில் 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை மதிப்பீடு செய்வதாகவும் அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 27,392,493 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 22,730,526 ஆனது.

### 2.2 நிதி கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மக்கள் வங்கியில் காணப்படும் சுற்றாடல் கணக்கில் ரூபா 43,340 தொகை 02 ஆண்டுகளாக செயலற்றுக் காணப்பட்ட போதும் அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதற்காக பிரேரனை ஒன்றை மகா சபைக்கு முன்வைத்து விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரப் படி நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் வரி | 9,391,000 | 9,391,000 | 7,860,693 | 1,530,307 | 8,159,000 | 8,159,000 | 6,952,137 | 1,206,863 |
| (ii) | வாடகை | 12,540,000 | 12,540,000 | 8,977,673 | 3,562,327 | 6,718,100 | 6,718,100 | 5,959,555 | 758,545 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,610,100 | 3,610,100 | 2,056,391 | 1,553,709 | 1,385,100 | 1,385,100 | 1,444,536 | (59,436) |
| (iv) | ஏனைய வருமானம | 45,961,000 | 45,961,000 | 7,653,714 | 38,307,886 | 38,804,000 | 38,804,000 | 7,318,784 | 31,485,216 |

### 2.3.2 சுற்றாடல் அனுமதிப்பத்திரம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஜுலை 30 திகதியன்று காலாவதியான 12 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்தரங்களின் புதுப்பிப்பு மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. அதன் காரணமாக சபைக்கு ரூபா 48,000 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்ததுடன் அவ் வியாபாரத்தினால் ஏற்படும் சுற்றாடல் தாக்கம் பற்றிய காலரீதியான மதிப்பீடொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 1988 இலக்கம் 56 மற்றும் 2000 இலக்கம் 53 கொண்ட சட்டங்கிளினால் திருத்தப்பட்ட 1980 இலக்கம் 47 கொண்ட தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த வியாபாரங்களின் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கும் செயன்முறைக்கு தற்போது ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

### 2.3.3 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 15,273,366 ஆனதுடன் ஓராண்டை விஞ்சிய அறவிட வேண்டிய மீதிகள் ரூபா 5,774,241 ஆனது. மீளாவாண்டிற்காக முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டு இருக்காததுடன் மதிப்பீட்டு பணம் ரூபா 30,000,000 ஆனது. | வருமானம் அறவிட கவனம் செலுத்தப்பட வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணம் பெறும்பாலும் ஆண்டினுள் கிடைக்கின்ற போதும் முத்திரைக் கட்டணம் கிடைப்பதில் சிறு தாமதம் காணப்படுகிறது. நீதிமன்ற தண்டப்பண பட்டியல் தயாரித்தல் சபை அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட போதும் முத்திரைக் கட்டண பட்டியலை காணி பதிவாளர் அலுவலக உத்தியோகத்தர்களினால் தயாரித்து பெற்றுத் தரும் வரை காத்திருக்க வேண்டி ஏற்படுவதாக அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் விளம்பர அறிவித்தல் கட்டணம் அறவிட புதிய உப விதியொன்றை வரைந்து அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அதன் 21 பிரிவு பிரகாரம் கட்டணம் இன்றி பிரசுறிக்கக்கூடிய அறிவித்தல்களின் அளவு குறிப்பிடப்படாததால் சபைக்கு வருமானம் இழக்கக் கூடிய சந்தர்ப்பம் காணப்பட்டது. | குறைபாடுகளை நிவர்த்தி செய்து உப விதியை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | திருத்தங்களை உள்ளடக்கி அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

#### (ஆ) செயல் நடவடிக்கை திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நரைவேற்றப்பட்டிருந்த செயல்களின் முன்னேற்றத்தை காட்டும் வகையில் செயலாற்றல் அறிக்கை சமர்பிக்கப்பட்டு இருக்காத காரணத்தால் செயல் நடவடிக்கை திட்டத்தின் எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடையப் பெற்றுள்ளனவா என பரிசீலனை செய்ய முடியாமலிருந்தது. | செயல் நடவடிக்கை திட்டத்தின் முன்னேற்றத்தை இனங்காணக் கூடிய வகையில் செயலாற்றுகை அறிக்கை தயாரித்து சமர்பிக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது அளவுகோளை உட்படுத்த முடியாதிருந்ததுடன் அது தொடர்பான அடுத்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரக்கும் போது அளவுகோளை உட்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | வருமானப் பிரிவின் நோக்கத்தின் கீழான புதிய வருமான வழிகளை ஏற்படுத்துவ தவிர நிலுவை வருமானத்தை அறவிட வேலைத் திட்டமொன்றை உட்படுத்தியிருக்கவில்லை. | வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீதவரி மற்றும் ஏக்கரி வரி நிலுவையை அறவிட வேலைத் திட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டதுடன் அதன் பிரகாரம் 2019 ஆண்டு நிலுவை வருமானம் ரூபா 2,854,578 தொகை அறவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

(இ) **திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கழிவு முகாமைத்துவத்தின் போது எஞ்சுகின்ற பொலிதீன் போன்ற உக்கலடையாத கழிவுகளை வெளியிட ஒழுங்கான முறைமை ஒன்றை செயற்படுத்தி இருக்கவில்லை. | ஒழுங்கான முறைமை ஒன்றை செயற்படுத்த வேண்டும். | கழிவு முகாமைத்துவத்தின் போது இறுதி வெளியிடலை மேற்கொள்ள ஒழுங்கான முறைமையொன்றை தயாரிப்பதற்காக இனங்கண்டுள்ள காணியை பெற்றுக் கொள்ள தேவையான ஒதுக்கீட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்காய்வு அவதானிப்பு |
| --- | --- | --- | --- |
| (அ) | மலசல கழிவுகளை வெளியேற்ற பொருத்தமான இடமொன்று சபைக்கு சொந்தமா இல்லாததால் மலசல கழிவுகளை வெளியேற்றும் சேவையை மக்களுக்கு வழங்க முடியாதிருந்தது. | மலசல கழிவுகளை வெளியேற்ற இடமொன்றை தேடிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | கழிவுகளை வெளியேற்ற காணியொன்றை பெற்றுக் கொள்ள அவதானிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 04 சுடுகாடுகளில் காணப்படும் விளைச்சலை தரக்கூடிய மரங்கள் பற்றிய கணிப்பீடொன்றை மேற்கொண்டு ஆவணப்படுத்தியிருக்கவில்லை. | மரமட்டைகள் பற்றிய கணிப்பீடொன்றை மேற்கொண்டு ஆவணப்படுத்த வேண்டும். | சுடுகாடுகளில் காணப்படும் மரமட்டைகள் பற்றி 2020 ஆண்டில் கணிப்பீடொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ஆளணியினுள் 20 பதவி வெற்றிடங்கள் மற்றும் 03 ஊழியர் மிகையும் காணப்பட்டது. | முக்கிய வெற்றிடங்களை பூர்த்தி செய்து கொள்ள நடவடிகதை எடுக்க வேண்டும். | சபை செயற்பாடுகளை தொடர்ந்து வினைதிறனாக நடாத்திச் செல்ல சேவை தேவைப்பாடின் மீது ஒரு சில பதவிகளிற்காக ஊழிய அடிப்படையில் மற்றும் அமைய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டதாகவும் அங்கீகார பதவிகளின் வெற்றிடங்களிற்காக எழுத்து மூலம் கோரிய போதும் இது வரை அக்கோரிக்கை நிரைவேற்றப்படவில்லை என அறிவிக்கிறேன். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 ஆண்டில் சபைக்கு கிடைத்திருந்த ரூபா 1,200,000 பெறுமதியான டிரெக்டர் வண்டியொன்று 2018 மார்ச் 13 திகதி ஏலத்தில் விற்க ஆளுனரின் அங்கீகாரத்திற்கு முன்வைக்கப்பட்டிருந்த போதும் அதனை பழுதுபார்க்குமாறு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2020 மே வரையும் நடவடிக்கையொன்று எடுக்கப்படாது விளைவற்று நிலவியது. | டிரெக்டர் வண்டியை பழுதுபார்த்து பயன்படுத்த விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏலத்தில் விற்க அங்கீகாரம் கிடைக்கவில்லை எனவும் பழுதுபார்க்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அறிவிக்கிறேன். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 85 சுடுகாடுகளில் 65 இனை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிமையை சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை வேண்டும். | அச் சுடுகாடுகளின் உரிமை பிரதேச செயலாளரிற்கு உரியதாகையால் அவற்றின் உரிமையை சபைக்கு ஒப்படைக்குமாறு சபை முன்மொழிவுடன் பிரதேச செயலாளரிற்கு அறிவித்து அனுப்பப்பட்டுள்ளது. |